ஓம் குஹேசாயநம:

11-1

ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகளது

சுத்தாத்வைத நிர்ணயம்.

FIRST EDITION—400 Copies.

மஹாதேஜோமண்டலத்தாரால்

வெளியிடப்பட்டது.

ACC NO 39227

1919.

11-1

KOVILOOR ANDAVAR ★ KOVILOOR LIBRARY ★
A. No. 39227

உ

ஓம் குஹப்ரஹ்மணே நம:

அத்தியாச்சிரம

வைதிக சைவசித்தாந்த ஞானபானுவாய

பாம்பன் :

ஸ்ரீமத் - குமரகுருதாசசுவாமிகளது

சுத்தாத்வைத நிர்ணயம்.

ஸ்ரீமத் - சுவாமிகளுடைய சீடர்களு ளொருவரும்

குமாரச்சிவமெனும் பெயருடையருமாகிய

திருவல்லிக்கேணி :

தா. வேங்கடாசல முதலியாரவர்களால்

எழுதப்பட்டவிதனை

" மஹாதேஜோ மண்டலத்தார் "

சென்னை :

பிரிட்டிஷ் இந்தியா பிரஸில்

பதிக்கும்படி செய்து வெளிப்படுத்தினர்கள்.

1919.

இதன் விலை அணு 3.

உ

சிவமயம்.

குமரகுருதாஸ குருப்யோநம:

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளது

சுத்தாத்வைத நிர்ணயம்.

"மேவு வாருனை வேண்டுநர் மேன்கதி
மேவு வாருனை வேண்டலர் வீழ்கதி
மேவு வாரக மேயொளிர் மேனுதி
மேவு வாரயில் வேந்தெனு மீசனே."—[திருவலங்கற்றிரட்டு.]

சித்தாந்த மென்னும் பெயரிய பத்திரிகையைச் சார்ந்ததாய் 1916-ம் வருடத்து ஆகஸ்டுமாதத்தில் வெளியிடப்பட்டதாயுள்ள பகுதியிற் "சிவஞானசுவாமிகளின் அத்துவிதக்கொள்கை" என்னும் பெயர் புனைந்து வரையப்பட்ட செய்திகளும், அதனடியில் 'நட்ட பாக்கம் அம்பலவாண நாவலன்' என ஊரும் பெயரு மெழுதப்பட்டிருப்பனவுங் கண்டனம். அச்செய்திகள் பலவும் மிக்க குழறுபடை என்பதைப் பரிபூரணனந்த போதத்தையும், அதனுரையாய சிவசூரியப்பிரகாசத்தையுங் கண்ணுற்ற கல்வியறிவுடையார் யாவருமுணர்ந்திருப்பராயினும் அவ்வாறுணரப்பெறுதார்பொருட்டே இதன்கட் சில தீட்டுதல் எமக்குக் கடமையாயிற்று. அப்பெயர்க்கடியுழைப் "பாயிரம்" என்பதொன்றெடுத்தெழுதி அஃதின்ன நூலிற்றென்பதுணர்த்துவான் "இப்பாயிரம் பரிபூரணாநந்தமென்னு நூலினுள்ளது" என்னுங்குறிப்பும் வரையப்பட்டது. அங்ஙனம் 'பரிபூரணனந்த போதமென்னுநூல்' என வெழுதாமையால் அந்நூற்பெயரினையே நன்கறிந்துகொள்ளா இழுக்கினின்றுகொண்டே யெழுத அது தொடங்கப்பட்டதென்பது போதரும். வேதம், கன்மகாண்டம் ஞான காண்டமெனவிருத்தலால் அது ஞானக்கூறமென்பதையும், ஆகமம் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் பாதங்களையுடைமையின்

அதுவும் ஞானங்கூறமென்பதையு மறியாத அவ்வெழுத்துக்காரர், ஓங்காரதேவ வணக்கச்செய்யுளுக்குப் பொழிப்புரை யுரைத்த ஆசிரியர் "சிறப்புற்றோங்கியுள்ள நான்கு வேதங்களையும் எடுத்துக்கூறற்கரிய (பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்தவுண்மைக ளினிதமைந்த) ஆகமங்களையும், ஞானசூக்குமங்களை எடுத்துக்கூறும் பொலிவினையுடைய பலநூல்களையும்" என வுரைத்த வுரையில், "வேதாகமம் ஞானசூக்குமங்களைக் கூறு" என்பது பெறப்பட்டதெனக் குறை கூறுதல் அறிவுடைமையாகாது. கூறியவாறு வேதமென்னும் பெயர் மாத்திரையே ஆகமமென்னும் பெயர் மாத்திரையே அந்த ஞானமறியக்கிடக்கின்றது. இன்னும் 'வேதம்' என்னுஞ்சொல்லும், ஆகமம் என்னுஞ் சொல்லுமை 'ஆ' என்பதும் ஞானமெனும் பொருளைப் பயக்குமென்னுந் தொல்வழக்குங் கருதிக்கொள்ளத்தக்கதன்றோ. பலதிறக்கன்மங்களையும் ஞானத்தையும் விதிக்கின்ற ஏனைய நூல்களுள் ஞானங்கூறு நூல்களே "ஞானசூக்குமங்களைக்கூறும் பல நூல்கள்" என்றுரைக்கப்பட்டன. அப்படி யுரைத்தது சால்பிற்றேயாம். ஞானானுபூதியிலெய்தும் அனுபவ இரகசியங்கள் ஞானசூக்குமங்க ளெனப்பட்டன. இச்சூக்குமங்களும் கந்தானுபூதியும் அஃதனைய பிறநூற்றிறங்களுமறியாது "பலநூலென்பன யாவை, ஞானசூக்குமங்களென்பனயாவை, அவை யெத்தனையவென்பவும் பிறவும் ஐயமாம்" என்னுங் கடாக்களெழுப்பப்பட்டன. இத்திற ஐயமொழித்துக்கோடல் அப் பொழிப்புரையாசிரியரையும், நூலாசிரியரையும் விதிப்படி வழிபடுஉஞ் சற்சீடற்கன்றோவுறும். இவை யொத்த ஐயங்கள் இன்னுமுளவேல் அவற்றினையும் இவ்வழியே நீக்கிக்கொள்ளலா மென்னுமொருமுடிபே யிங்ஙனம் கருணையாற் கூறத்தக்கதாகலின் அதுவுங்கூறினு மென்றொழிக. "ஐயமாம்" என்றும், "ஐயமே அதனுள்யாண்டுமாம்" என்றும் ஐயப்பாட்டிலேயே முன்னர் முடிபு கூறிக்கொண்டு பின்னர் "அஃதாய்தல் மணற்சோற்றுட் கல்லாய்தல் போலும்" என்று முற்றுங் குற்றத்தின்பாற் படுத்தொரு முடிவு கூறிக்கொண்டமை அதிவியாத்தி தலைபட்டதன்மையும் அழுக்காறுமேயாம். "வேண்டுகோண்முறையான் வேண்டிக்கோடும்" எனப் பன்மை வரைந்துகொண்டு "அம்பலவாணநாவலன்" எனவொருமையிற் கையெழுத்திட்டதும் வழுவே. எழுதிய சொல்லும் பொருளுமாய்க் காணப்பட்டவவற்றுட் பலவும், இப்படியு மிதற்குவேறுனவுமாம் பல்வகைப்பட்ட வழுக்களெனவுஞ் சாதிக்கலாம்.

யாதானுமொரு நூலாராய்ச்சியில் அந்நூல் முழுவதும் வழு வென்று கூறற்கே யிவையும் உவமானமா யெடுத்துக்கொள்ளப்பட்ட மணற்சோ றென்பதனை, அங்ஙனம் சிலவழுக்களேயுளவென நிச்ச யித்தமாத்திரையே ஐயமாக நினைத்தமாத்திரையே உபயோகித்தமை சால்புடைமையாகாது. முழுவதும் வழுவாயிருப்பின் அவ்விவரங் காட்டப்படல்வேண்டும். எந்நூற்கண்ணும் யாவும் வழுவென நிச் சயித்தல் எவரானுங் கூடாதகாரியமென்பது அறிவுபடைத்தாரனை வருமொப்புமொரு முடிபாமாகலின் அன்னோர் அங்ஙன் இவ்வித வுவ மானங் கூறத்துணியாரென்க. சிலர் கூறியனவுளவேல் அவை, யாதும் விசாரியாமலே யொருவர் பின்னேயொருவர் போதலென்னுங் கதானுகத நியாயத்தின்பாற்படு மிழுக்கேயாமென்க. இது கிடக்க. அம்மணற்சோற்றுட் கல்லாய்தன் மடமையாகுமெனக் கருதியவழியே "கல்லாய்தல்போலும்" என அதுவிடுத்தார். இஃதும் இவை புடைமையாவதன்று. என்னை? மணலினும்பெரிது கல்லெனவும், அத்திறக்கற்கண் மணற்குவையினுள் உளவோ? இலவோ? எனவாய் தல் சால்பிற்றேயெனவு நிச்சயிக்கப்படூஉ மாகலின். மேல், மணலுங் கல்லுங் குற்றங்கட் குவமானமேயாகலின் ஆய்தலாற் பயனென்னை? என்பது கருத்தெனின்,—மேனுவன்றவாறு ஆராய்ச்சியிலெந்நூலும் முற்றுங்குற்றமென லேற்படா தென்னுமொரு துணிபானிதுவு மறுக் கப்படும். அன்றியும், உயிருடற் குறுதிபயப்பதாய்த் தேவநிவேதனத் திற் குரியதாயுள்ளசோற்றினை உவமானநிமித்தம் மண்ணாக்கி அதனுட் கல்லையும்வைத்துக் கூறுஞ்செய்கை நல்லார் செய்கை யாவதன்று. விளக்கமென்னும் பெயரோடுள்ள யாதொரு நூலினை அவ்விளக்கம் (=விளக்கு) எனவே யேன்றுகொண்டு மண், மயிர், மலப்பூழி, குப்பை முதலியவற்றை மாறிமாறி வாரிவாரி வீசி அதனையவிப்பான் சூறவளிக் காற்றுத் தேடிய செய்கையினை யிச்செய்கையுமொக்கும். விளக்கம்புரி விளக்கினை யவிப்பதூஉம் இருள்விரும்பும் பெற்றியே யன்றோ. 'பரிபூரணானந்தம்' அல்லது 'பரிபூரணானந்தபோதம்' 'சிவசூரியப் பிரகாசம்' என்பனவற்றை யேன்றுகொண்டு அவைகளை முற்றுங் குற்றத்தின்பாற்படுத் துரைத்ததூஉம் இதனைத்தானே பொருந்துகின் றது. "பரிபூரணாநந்த போத சிவசூரியப்பிரகாசவுரை யுரைத்தார்க் கும்" என வவரங்கிகரித் தெழுதினதும் ஓரிடத்தே காணப்படுகின் றதே. "அந்நம்ப்ரஹ்ம" என்ற சுருதி கூறிய அருமைப்பாட்டினை யுணராது "மணற் சோறு" என்றுரைப்பது, நஞ்சமிர்தம் கசுமால

அமிர்தம் ஆபாசஅமிர்தம் என்று புகறல்பொருவும். எற்றுக்கோ விவேகிக ளிவ்வாறு கூறிக்கொள்வர்! மணற்சோறென்பதற்கு மணல் விராயசோறெனப் பொருள்கோடல் வேண்டுமெனின்,—அன்னணஞ் சோற்றில் மணலைவிரவுஞ்செய்கையும், மணலிற் சோற்றைவிரவுஞ் செய்கையும் ஒருஞான்றுமோரிடத்துமில வாகலின் அத்திறச்சோறுள தெனக்கோடலும் அதனை யுவமானத்தின்கட்படுத்தலும் இருட் சூரிய னெனவு மொன்றுளதெனக்கொண் டதனையுவமிப்பது போறலின், போந்த சுருதி முரணும் அன்னதூடணமு மேற்படுதலின், அஃதும் விவேகத்தின் செயலாகாது. ஆகவே, எவ்வாற்றானுமிச்சோற் றுவமானம் ஆய்வார்க்கு ஆயுந்தகைமையினை நல்காதென்பது திறம் பாத் தீர்வையாகலின், இவ் வுவமானத்தினை இனி யெடேன்மின் எடேன்மின் எனக் கற்றுவல்லா ரனைவருமறிவுறுப்பரெனல் சாதம். இதனால், ஆய்ந்தார்பெருமை யிற்றென வறியப்படுவதாயிற்று.

கூகூ - ஞ் செய்யுளுரையில் " தத்தம் மதக்கோட்பாடுகளை விசேடித் துணர்த்துதற்கே அத்வைதத்தோடு விசிஷ்டம் முதலிய சத்தங் கள் அவ்வம்மதாசாரியராற் சேர்க்கப்பட்டபடி சுத்தம் என்பதும்" எனவிருக்கின்ற பகுதியினை யெடுத்தெழுதிக்கொண்ட அவர் 'அத் வைதத்தோடு விசிஷ்டம்' என விருப்பதை 'அத்துவிதத்தோடு விசிட்டம்' என விகாரப்படுத்தியும் பரிபூரணனந்தபோதம் என்னும் பெயரிலுள்ள னகரத்தை நகரமாகத்திரித்தும், " விசிஷ்டம் முதலிய வற்றுள் யாதானுமொரு மொழியான் விசேடிக்கப்பட்டு" என நிகழுந் தொடரின் முதற்கட் 'சிவஞானமுனிவர்' என்பதனை வருவித்தும் எழுதியுள்ளார். இன்னன பல. சிவஞானமுனிவரென்பது அதன்கண் யாண்டுமிலது. விசிட்டமெனத் தமிழிலெழுதப்படுஞ் சொல்லானது 'விசிஷ்டம்' என்னும் வடமொழி விகாரமாம், அது வியாப்பியமாய்ச் சேர்ந்திருப்பதெனும் பொருளுடைத்து என்பனவற்றை யுணர்த்து மாறு அடியிற் குறிப்பெழுதியிருப்பதையும் அவர் கண்ணுறுதவராயி ஞர். யாது வரையப்பட்டிருப்பினும் இருந்தபடி யெடுத்தெழுதி நியாயங்கூறுவதன்றோ கற்றுணர்ந்தார்க்குக் கவினுகும். இனி, அந்த அத்வைதத்தையும் விசாரித்து ஒரு முடிபு கூறுதும். மண்டல ப்ராஹ்மணோபநிஷத்—

(தந்மநோவிலயம்யாதி தத்விஷ்ணோ: பரமம்பதம் |
தல்லயாச் சுத்தாத்வைதஸித்தி: | பேதாபாவாத் |
ஏததேவ பரமதத்வம் |)

"அம்மனேலயம் விட்டுணுவின் பரமபதமாம். அப்பரமபத லயத்திறுற் சுத்தாத்வைதஸித்தி; பேதமின்மையால். அதுவே பரம தத்துவம்" என்றோதுகின்றது. இவ்வோத்துத்தானே "அந்த மனே லயம் எதுவோ அது விட்டுணுபரமபதமாம்: அப்பரமபதலயமே சுத்தாத்துவித சித்தி: பேதமின்மையே பரமதத்துவம்" எனச் சிவசூரியப்பிரகாசத்தில் ஓராறு விளக்கப்பட்டது. இங்கோது சித்தி, "சுத்தாத்வைதம்" என முடிவு செய்தற்குப் (பேதாபாவாத்=) 'பேதமின்மையால்' என ஏதுக்கூறுகின்றமையால் விட்டுணுவின் பரமபதம் பேதத்தோடுங்கூடிய சித்தியென்பதும், அதனுலது சுத் தாத்வைத மாகமாட்டாதென்பதும் பெறப்பட்டன. விட்டுணுவின் பரமபதத்தினும் மேம்பட்டதே சிவகதி; அதுவே வைதிகசைவ நூற் றுணிபென்பது—

(தஸ்மாத்ஸர்வாங்பரித்யஜ்ய த்யேயாங்விஷ்ண்வாதிகாங்ஸுராங் |
சிவஏவஸதாத்யேயஸ் ஸர்வஸம்ஸாரமோசக: ||)

"சமுசார துக்கநாச முத்திப்பிராத்தியின் பொருட்டு விட்டுணு முதலிய சர்வ தேவர்களையும்விட்டு எஞ்ஞான்றுந் தியேயனுகவுள்ள சிவனையே தியானிக்கவேண்டும்" என அதர்வணவேதோபநிஷத்துக் களுள் ஒன்றும்,

"பரம வத்துவித சைவமெய்ஞ் ஞானி பாரளந் தவன்முத லோரால்
வரமுறப் பூசை புரிந்திடத் தக்கோன்"

எனச் சூதசங்கிதையுங் கூறுமாற்றானும் பெறப்படுதல் சிவசூரி யப்பிரகாசத்துங் காட்டப்பட்டது. இச் சிவகதியின் மேலொரு கதியின் றென வறிவுறுத்தற்கே (ஏததேவ பரமதத்வம்=) "அதுவே பரமதத் துவம்" என அம் மண்டல ப்ராஹ்மணோபநிஷத் மொழிகளு மெழுந் தன. இம் மொழிகளுள் 'அது' என்பது—பேதமின்மையாற் சுத் தாத்வைதஸித்தி என்பதைச் சுட்டுகின்றமையின் இம்மொழிகடாமே, "பேதமின்மையே பரமதத்துவம்" எனச் சிவசூரியப்பிரகாசத்துங் கூறப்பட்டுள வென்க. "பேதமின்மையாற் சுத்தாத்வைதம்" எனவே பேதமுண்மை சுத்தாத்வைத மெனப்படாதாகலிற் 'சுத்தம்' அடை மொழியெனவே அச் சிவசூரியப்பிரகாசத்தே கூறப்பட்டது. அத் வைதத்தோடு சுத்தமென்னும் அடைமொழி (=விசேடணமொழி) புணர்த்து இவ்வாறு கூறுவது ஒருபயிடதந்தானே அது சிறக்குமோ? எனின்,—சிறக்குமென்பது பின்னர்க் கூறப்படு நியாயங்களால் இனிது

விளங்கும். வேதபூர்வபாகத்தில் "நமச்சிவாய" என்னு மகாமந் திரத்தை யோதுவது யஜுர்வேத மொன்றேயாகலின் அம்மந்திரஞ் சிறக்குமோ? என்னுங்கடாவினையு மிங்ஙனெழுப்பிக்கொளின் "ஓருப நிடதமுடிவு சிறக்குமோ? என்னும் வினுவின்கதியு மினைத்தென வுணரப்படும். ஈண்டந்த நமச்சிவாய வென்பது சிறப்பாக வேத நடு வாம் இதயத் திருக்கின்றதே யெனின்,—அந்நடுவேதத்தினைச் சார்ந் ததே இம் மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும்; இதனிற் சிவோபாசனை யுங் கூறப்பட்டதென்க. அம் மகாமந்திர தெய்வம் பரத்துவத்தானங்க ளெங்கணும் வியாபித்திருந்தாங்கு மண்டலப்ராஹ்மணோபநிஷத சுத் தாத்வைதமும் தூயசிவகதி சொல்லுமிடந்தோறும் வியாபித் திருக்கு மென்க. யஜுர்வேத ஸர்வ்ஸாரோபநிஷத்—

(அம்பஸாமர்ணவஇவஸுகசேதநாநாமதிஷ்டாநநித்ய
சுத்தாகண்டாத்வைதசிதாநந்தைகரஸமாநந்தம்|)

"புனல்கட்குக் கடல்போலச் சுகசேதனங்கட்கு ஆதாரமாய் நித்த சுத்த அகண்ட அத்வைத சிதானந்த ஏகரசமாயுள்ளது தான் ஆனந் தம்" என்று கூறும்பகுதியில் அகண்டாத்வைதம் என்பதற்கு முன்னே "சுத்தம்" என வருவதூஉம் இங்ஙனங் கருதிக்கொள்ளத் தக்கதே. பிரமமொன்றே உண்மைப்பொருள்; அதற்குப் பெத்தமு மின்று முத்தியுமின்றெனு மாற்றான் அத்வைதார்த்தமு மிதுவேயாதல் வேண்டும் என்று ஏகான்மவாதஞ் சாதிக்கப்படு நிலைக்கே அத்வைதம் அடைமொழி பெறுதிருத்தற் குரித்தென்பதூஉம்; பதி, பசு, பாச மென்னு முப்பொருள்களும் அனாதி நித்தியம்; அவற்றுட் பதியாகிய சிவமே, "கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குல வரையைக் கலந்து நின்ற, பெரியானை" என்று தமிழ்வேதங் கூறியாங்கு, பசு பாசங்களிலும் வியாபித்துளது; வியாபித்திருப்பினும் பசுவாய ஆன்மா பதியை யறியாதிருக்கின்றமையின் அச்சம்பந்த அத்வைதம் பெத்த நிலையினதாம்; இது பேதாத்வைதமெனற் குரித்தென்பதூஉம், பாச நீங்குமாறு சோகம்பாவனை புரியும் (=அவன் நானெனப்பாவிக் கும்) அத்வைதோபாசனை வாயிலாக வெய்துஞ் சுவானுபவ சம்பந்த அத்வைதம் முத்தி நிலையினதாம்; இது பேதமிலாச் சுத்தாத்வைத மெனற் குரித்தென்பதூஉம் நியாய நிலை யுணர்வா ரெவரு மொப்பத் தக்கனவாம். இத்திறம்விடுத்துப் பெத்தமுத்தி யிரண்டிலும் ஒரு படித்தான அத்துவிதமே கூறத்துணியின் அது மேலே கூறிப்

போந்தபடி ஏகான்மபக்ஷ முடிவினையே கொள்ளும். அது கொள்வார் கொள்க. இனி, பதி பசுவென்னும் இருதிறப் பொருள்களின் அனுதி சம்பந்தமே அத்வைதமெனப்படுவது ; புதுவதாக வொரு சம்பந்தம் புகல வேண்டாவெனின்,—உரைப்பம். அத்வைதம் அனுதியென்பதொன் றேற்புடைத்தே. ஆயினும் உபாசன சம்பந்தமும், அருட்சத்தி பதிதலென்னுஞ் சத்திநிபாத சம்பந்தமும் முத்திதசையிலெய்துதலிற் புதுவதாக வொரு சம்பந்தம் புகலவேண்டாவென்ப தேற்புடைத்தன்றென்பாம். இச்சம்பந்தமே சார்ந்ததன் வண்ணமாய் நிற்றலெனப்படூஉமென்றுங் கூறுப. பசுத்துவத்தோடு கூடிப் பசுவெனவும், சிவத்தோடு கூடிச் சிவமெனவு நிற்றலே சார்ந்ததன் வண்ணமாய்நிற்றலென விங்ஙனங் கொளக்கிடத்தலின் அதுவும்—

" ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினே டத்துவித * மாகுநா ளெந்நாளோ."

என்னுந் தாயுமானுர் பாடற்கண்ணும் பெறப்படுகின்றமையிற் கூறிப்போந்த பெத்தநிலை அத்வைதமும், முத்திநிலை அத்வைதமுஞ் சித்தித்தவாறே ஆம். இம் முத்திநிலை அத்வைதங் கொளப்படாதாயின் உபாசன சம்பந்தமும், அருட்சத்தி பதிதலென்னுஞ் சத்திநிபாத சம்பந்தமும் இலவென்பது தோன்றிநிற்பதோடு சிவத்தோடு கூடிச் சிவமெனவு நிற்றலெனல் வெற்றுரையா மென்பதூஉம் எஞ்சாதெழும். அன்றியும், அத்வைத மென்பதற்கு இச்சம்பந்தங்கள் வேறுகிச் சம்பந்தமே அத்வைதமென்பதூஉம் பொருந்தாதொழியும் ; உய்த்துணர்க. இங்ஙனங் கூறியுள்ளன கருதுபு, ஸர்வஜ்ஞானோத்தராகமம்—

(யச்சிவஸோஹமேவேதி அத்வைதம்பாவயேத்ஸதா।)

" சிவனே நானென்னும் அத்வைத பாவனையை யென்ஞான்றும் பயில்க " என்று மிழற்றலும், " அத்வைத பாவனையுடையோன் ஆன்மாவிற் சிவனைக் கண்டு உபாசித்து " என்னும் பொருளில்—

(அத்வைதபாவநாயுக்த: ஸதாத்மாநமுபாஸயேத்।)

என்றும், " ஆன்மாவிற்கு எல்லாப் பொருள்களி னியல்புகளுமுளவாம் ; ஆன்மா எதனை எதனைச் சார்ந்தது, அதனதன் வண்ணமாந் தன்மைத்து " என்னும் பொருளில்—

(ஸர்வேதர்மாத்மந:ஸந்தி யதேவபரிகல்பயேத்।
தத்தத்பவது)

* சாருநா ளெந்நாளோ என்றும் பாடம்.

என்றுங் கூறிச்சேறலுங் கருதிக்கொள்ளத்தக்கன. பிருஹதாரண்யகோபநிஷத்—

(யதாகாரீயதாசாரீ ததாபவதி)

" யாரெதனைச் செய்கின்றனரோ, யாரெதனை யாசரிக்கின்றனரோ அவ ரவ்வாறாகின்றனர்" என்றோதுதலும் ஈற்றுக்கூற்றுப் பொருளிலேய்கின்றது. இந்நியாயவதானே பெத்தமுத்திக ளுளவென்னு மார்க்கத்துறம் அத்வைதம் அடைமொழியும் பெறல்வேண்டுமென்பதூஉம், அது பிரமாணங்களிற் சொல்லப்படாவிடினுங் கொள்ளற்பாலதென்பதூஉம் ஸ்ரீமத் - சுவாமிகள் (=சிவசூரியப் பிரகாசாசாரியர்) கருத்தாயிருக்கின்றமையின் அதுவும், தேவாரமாகிய தமிழ்வேதத்தில் 'அத்துவிதம்' (அத்வைதம்) என்னும் வாசகம் இலாதொழியினும் வேதமென்றற்கேற்ப ஆண்டு மதுகோடல் மரபென்னுமோராற்றானே நிலைபேறுறுதலின், இக்கருத்திற் கியையவே 'சுத்தம்' என்னும் அடைகொடுத்துச் சுருதிசொற்ற வாக்கியத்தினையும் சுவாமிகள் நாலாயிரப்பிரபந்தவிசார மென்னு நூலியற்றியருளுங் காலத்திற்றானே கண்டுபிடித்தெடுத் ததன்கட் காட்டினமையின் இது பற்றி மகிழ்ச்சியுறாதாரும் வைதிக சித்தாந்திக ளெனப்படுவார்கொலோ? அத்வைத விடயத்தே சைவருளவரெவர், ஏனையோருளவரெவர் எவ்வாறு போயினுஞ் சுவாமிகளது கொள்கை, மேனுவன்றவாறு முத்திநிலையில் அத்வைதமானது சுத்தமென்னும் அடைபெறுமென்பதூஉம், அஃதுஞ் சுருதிநெறி யென்பதூஉம், நியாய மோம்புவார் யாவரும் இது கொள்வரென்பதூஉம் இங்கு முடிவாக மொழியத்தக்கனவாம். இம்முடிவுதானே ஸ்ரீமத் - தாயுமானசுவாமிகளாலுங் கொள்ளப்பட்ட தென்பது—

"'பொய்கண்டார் காணுப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ.'

'அத்துவித மான வயிக்ய வனுபவமே சுத்தநிலை'"

என்னும் அவருடைய திருவாக்குக்களா னுணரக்கிடக்கின்றது. இவ்வா றுணர்த்துமவைகளே "அருமறைக ளொன்றென்னு தத்துவிதமென்றறையும்" என மேய்கண்ட நாதனுர் கூறியருளியவாறு பொருளொன்றேயென்பது வேதத்தின் கருத்தன்று; பெத்த முத்திகட்குரிய சீவான்மாவுண்டெனவு மஃதோதுமாகலின் அத்துவிதமென்று கூறும்; அவ்வத்துவித மார்க்கப்பயன் ஐக்கிய அனுபவ சுத்தநிலையிற்

ருகலின் அது சுத்தாத்துவிதமெனப் படல்வேண்டும்; இவ்வத்துவித முடையோனே மெய்கண்டநாதன் என்பனவு முணர்த்துவவாயின. சுத்தாத்துவிதமெனப்படுவதே 'புனிதமெனும் அத்துவிதம்' எனப் பட்டது. புனிதம்=சுத்தம். ஈண்டுப் "பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித" என்னுமடிக்கட் 'பொ' என்னு மெழுத் திற்குப் 'பு' என்னுமெழுத்து மோனையாக வந்தமையாற் சுத்தாத் துவிதமென்பது கூறுதற்கே 'புனிதம்' என்பது பிரயோகிக்கப்பட்ட தெனக் கோடல் கூடுங்கொல்? எனின்,—கூடுமென்னலாம். என்னை? 'பு' அணைந்த சொல்லாகவே புகரற்ற, புரைநீத்த, புகலரிய, புக ழுடையவென்பனவும், பொருவில்லா, பொலிவாரும், பொருணிலவும், பொழிலுடைய வென்பனவும், இயைபுடைப் பிறபதங்களும், அங்ங னம் பிரயோகிக்கலாம்; வெண்டளையுமியையும்; அவ்வாறு செய்யப்படா மையின். இதுவேயுமன்றி, 'அத்துவித மான வயிக்ய வனுபவமே சுத்த நிலை' என்பது சுத்தாத்வைதமென்பதை நிலைபெறுத்துங் கருத்தானே கூறப்பட்டதாகவே கொள்ளக்கிடக்கின்றது. அம்பா சமுத்திரம்: வக் கீல் ம-ா-ா-ஸ்ரீ V. P. காந்திமதிநாத பிள்ளை B. A. அவர்கள் போந்த "பொய்கண்டார்காணு" "அத்துவிதமான" என்னுந் தொடக்கத்த இரண்டு செய்யுள்களையும் "அத்துவிதம்" என்றற்றொடக்கத்துப் பிறிதொரு செய்யுளையு மெடுத்தெழுதிக்கொண்டு சுத்தாத்வைதமென் பதையே நிறுவியெழுதியசெய்தி அச்சித்தாந்தமேன்னும் பத்திரிகை யுழைத் "தாயுமானுரும் அவரது அத்வைதமும்" என்னும் பாங்கரிற் காணப்படுகின்றது. இதனை,

"ஜீவர்கட்குக் கிடைக்கு மனுபவமே யத்வைதவனுபவமாம். இவ்வனு பவநிலையே சுத்தநிலை. இந்நிலையே யாராலுஞ் சொல்லவாரதநிலை. இக் கருத்தினை நமது சுவாமிகள் (தாயுமானவர்) 'அத்துவிதமான அயிக்கிய அனு பவமே சுத்தநிலை யந்நிலையார் சொல்வார் பராபரமே' யென்றருளியிருக்கிறார் கள். எனவே சைவ சித்தாந்திகள் தமது அத்வைதம் 'சுத்தாத்வைதம்' என் பதை இச்சுவாமிகளும் ஒப்புவதாயிற்று." எனவும், "அவ்வத்வைதம் மெய் கண்டசுவாமிகளால் விளக்கியருளப்பட்டுள்ளதென்பதும், அதுவே யுண்மை யத் வைதமென்பதும், சைவசித்தாந்திகள் கூறும் அத்வைதமே யதுவாமென்பதும், ஏனைச்சமயிகள் கூறுவது போலியத்வைதமென்பதும் விளங்கவே 'பொய்கண் டார் காணுப் புனிதமெனு மத்வைத மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந் நாளோ' என்றும் நமது சைவசந்தானகுரவர் சுவாமிகட்கு நமது சுவாமிகளும் தோத்திரங் கூறியுள்ளார்கள்."

எனவும் அவராண்டெழுதியுள்ளன கொடேயுணரலாம். இவ்வாற் றனே வைதிகசைவ சித்தாந்திகளாயுள்ளார் தாமாகவே தெளிந்த திறங்

கொடோ, தாயுமானசுவாமிகள் கூறியருளிய திறங்கொடோ சுத்தநிலையாய சுவானுபூதிக்குரிய தமது சித்தாந்தத்தைச் "சுத்தாத்வைதம்" என வழங்கி வந்தார்களெனல் புலப்படுகின்றது. இதனை, "சுத்தாத்துவிதமெனச் சைவத்திற்கூறும் வாய்பாட்டோடு முரணுமைப்பொருட்டு" எனச் சைவ வித்தியா நுபாலன யந்திரசாலையிற் பராபவஹூ பதிப்பிக்கப்பட்ட சிவஞானபோதப்பேருரையி லெழுதியுள்ள செய்தியும் ஆதரிக்கின்றது. அவ்வுரைக்கண்—

"இவ்வத்துவிதம், ஏனையோர்கூறும் அத்துவிதம்போலக் கேவலமென்றுதல் விசிட்டமென்றுதல் மறுதலையென்றுதல் யாதானுமொன்றுன் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய்நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்றது யாதானுமொன்றுன் விசேடிக்கப்படாது நிற்றலை."

என்னுஞ் செய்திகளு மெழுதப்பட்டிருத்தலை நோக்க, ஆண்டொருவயிற் றெரித்தவாறே சங்கராசாரியர், இராமாநுஜாசாரியர், மத்துவாசாரியராகிய மூவரும் தத்தம் மதங்களோடு அத்வைதம் முரணுமைப்பொருட்டு முறையே "கேவலமென்றும் விசிட்டமென்றும் மறுதலையென்றும் அடைகூட்டி"ப் பொருள் கொண்டனரென்பதூஉம், சைவசித்தாந்தமானது இவ்வடைமொழிகளை நீக்கிச் சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் 'சுத்தாத்வைதம்' எனப்பட்டதென்பதூஉம், பெறப்படு மதரானும், ஆண்டுச் 'சுத்தசத்தை' என்னு முதாரணமுங் காட்டப்பட்டிருத்தலானும் சுத்தம் பிறிதினியைபு நீக்க வந்த அடையன் றென்பதே அவ்வுரையாசிரியர் கருத்தாயிருக்கிறது. ஈண்டுக் கேவலம் முதலிய அடைமொழிகளை நீக்கவந்தமொழியே சுத்தமெனக் காரணங் கூறிக்கோட ரூன்றி நிற்றலின் அம்மொழியும் அத்திறத்த வோரடைமொழி யாகாவா றெமக்கு விளங்கவில்லை. இதுநிற்க. சுத்தம் விசேடண அடைமொழி யன்றெனின் இவ்வுரைக்கண் அது, வாளாகிடப்பதென்? எனக்கருதிய காரணத்தினுலோ, மற்றெக் காரணத்தினுலோ சிலசைவர், சுத்தாத்வைதமெனக் கூறவேண்டா; அத்வைதமென்பதே சாலுமென இஞ்ஞான்று பிரசங்கித்து வருகின்றனர். இங்ஙனம், அவ்வுரையாசிரியர் சுத்தாத்வைத மென்பது "சைவத்திற் கூறும் வாய்பாடு" என்றுகிளந்ததுமுண்மையால் அவர், சுத்தமென்பதை நீக்கிவிடல் கூடாதென்னுங் கருத்தேபற்றி அதற்கொரு பொருள்கூறி னைறன ரென்பதும், அப்பொருள் ஒரு பிரமாணத்திலுளதன்று; சொந்த யுக்தியாமென்பதும் பெறக் கிடக்கின்றன. இப்பொருட் பேற்றால் அந்தப்

பிரசங்கத்தார் கொள்கையும், பிரசங்கத்தார் கொள்கையால் அப் பொருட்பேறும் சுந்தோப சுந்த நியாயமாக மறுக்கப்பட் டொழிகின் றனவென்பது வெளிப்படை. இங்ஙனம் மணற்சோற்று மொழியர் யாதுசெய்வரோ! இவரும், "சிவஞான சுவாமிகள் அத்துவிதக் கொள்கை" என வரைந்துகொண்ட பெயரிற் 'சுத்தாத்துவிதக் கொள்கை" என வரையாமை, "சுத்தாத்துவிதமெனச் சைவத்திற் கூறும் வாய்பாடு" என்பதனோடு முரணி நிற்பதேயாயிற்று. இப்படி மறுக்கப்படு மிருதிறத் தெதுவு மொவ்வாது; சிவ சூரியப் பிரகாசத் திற் றெரிக்கப்பட்டதே யொவ்வும்; அதுவுஞ் சுருதிமுடிபாமென்ப தும் மேலே விளக்கிக் காட்டினுமன்றே. நிற்க. இராமாநுஜாது வைணவ மதம் அத்வைத மென்பதனோடு "விசிஷ்டம்" என்னும் அடைகூட்டி விசிஷ்டாத்வைதம் என வழங்கப்படுவது போலக் 'கேவலம்' என்னும் அடைகூட்டிக் கேவலாத்வைத மெனவும், 'மறு தலை' என்னும் அடைகூட்டி மறுதலை அத்வைதம் அல்லது (மறுதலை விரோதமெனப்படு மாற்றானே) விரோதாத்வைத மெனவும் அவ்வம் மதங்கள் வழங்கப்படுகின்றன வென்றற்கு அவ்வப் பாடியங்களில் ஆதாரமுண்டா? என வினவுவோர் பலரையுந் திருத்திசெய்யும் பொருட்டு அவ்வவ் வாக்கியங்களை அவ்வப் பாடியங்களி லிருந்தே யெடுத்துக்காட்டல் "சிவஞான சுவாமிகள் அத்துவிதக் கொள்கை" என்பதெழுதி அது தாபிக்க வந்தார்க்குக் கடமையேயாம். என்னை? அப்பேருரையில் "அடைகூட்டி" என்பதெழுதி யிருத்தலின். அவ் வாறு காட்டாக்கால் அவ்வடைமொழிகள் அவ்வுரையாசிரியராற் கற் பித்துக்கொள்ளப்பட்டன வென்றே துணியப்படும். படவே அம் மொழிகள் பெறுவம்மதங்களின் அத்வைதமுஞ் சுத்தாத்வைதமெனப் படுஉமாகலின் நமது யுக்தி சிறக்கமாட்டாதேயெனுங் கருத்தேபற்றி அம்மொழிக ளிணைக்கப்பட்டனவென்பதே தலைப்பட்டு நிற்கும்; உய்த் துணர்க. (தத்த்வமஸி=) 'அது நீ யாகின்றனை' என்னு மகாவாக்கி யம் மனனம் (=சிந்தித்தல்) ஆகவும், (அயமாத்மாப்ரஹ்ம=) 'இந்த ஆன்மா பிரமம் (=பெரிது) என்னு மகாவாக்கியம் நிதித்தியாசனம் (=தெளிதல்) ஆகவும், (அஹம் ப்ரஹ்மாஸ்மி=) 'நான் பிரமமா யிருக்கிறேன்' என்னு மகாவாக்கியம் சமாதி (=நிட்டை) ஆகவுங் கொளக் கிடக்கின்றமையானும், சமாதி வாக்கிய நீங்கலாக ஏனைய மூன்று வாக்கியங்களையுந் தழுவு மாற்றானுறு சம்பந்தம் சோகம் பாவனையாம் உபாசனாத்வைதத் தடங்குதனேக்கியும், அனாதியத்வை

தமு மிங்஫னமே கொளக்கிடத்தனேக்கியும், மண்டல ப்ராஹ்மணமல் லாத வேறு பல உபநிஷதங்களில் வருஉம் அத்வைதம் "ஆன்மாவின் பெத்ததசையின் சம்பந்தமாம்" எனச் சிவசூரியப்பிரகாசத் தருளிய வோர் நிர்ணயம் பிறந்ததாகும். இந்நிர்ணயத்துட்பட்ட உபாசனை, அனுதியென்னு மிருதிறச் சம்பந்தமும்—"சோகம்பாவனை யெனும் உபாசனைக் கண்ணும் அத்துவிதம் பொருந்தும்" என்றும், "இச் சம் பந்தம் உடம்பும் உயிரும்போல அனுதிக் கலப்பும் உடனுதலும் வேறு தலுமாகிய மூன்றுமென வறியவுள்ளது" என்றும் அச் சிவசூரியப் பிரகாசத்துங் கூறியுள்ளனவே. இங்஫னுறம் அத்வைதம்—

(ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்)

"சோமியனே! இதற்குமுன் (சிருட்டிக்குமுன்னே) அத்விதீயமா யுள்ள பொருள் ஒன்றே யிருந்தது: அது சத்தே." என்னுஞ் சாந்தோக் யோபநிஷத் வாக்கியத்தும்,

(அத்வைதபாவநாபைக்ஷ மபக்ஷ்யம்த்வைதபாவநம்।)

"அத்வைத பாவனைதான் பிக்ஷையேற்றுண்டல்; துவைத பாவனை புசிக்கத்தக்கதன்று." என்னும் மைத்ரேயோபநிஷத் வாக்கியத் தும்,

(ப்ரபஞ்சோபசமம்சாந்தம் சிவமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே)

"பிரபஞ்சலயத்தானமாய்ச் சாந்தமாயிருக்கின்ற சிவமெனும் அத்வைத வஸ்துவை நான்காவது தெய்வமாகச் சிந்திக்கின்றனர்" என்னும் மாண்டூக்யோபநிஷத் வாக்கியத்து மறியக்கிடக்கின்றது. இவ்வாக்கியங்களுட் சிவணிய அத்வைத சத்தங்கள் முத்திநிலையவல்ல வென்பது தெள்ளிது; இவை போன்ற பிறவும் அன்னவென்க. எஞ் சாப் பொருண்மையில் வேறெந்த உபநிஷத்துமென்னுது வேறுபல உபநிஷதங்கள் என்று ஸ்ரீமத்-சுவாமிகள் கூறினமையின் இவற்றிற்கு வேறாய பல உபநிஷதங்களு முளவென்பதும் பெறுதும். அவற்றுள் "அம்பஸாமர்ணவ" என்றற் றொடக்கத்ததாய் அத்வைத சத்த மேய்ந்ததாயுள்ள தொடரிற் 'சுத்தம்' என்பதுஞ்சேர்ந்த வாக்கியோப நிஷத்தும் மேலே காட்டினும். யாதானு மோருபநிஷத், இச்சுத்தத் தோடு கூடிய அத்வைதமென்னுங் கூற்றினைக் கூருதொழியினும், அத்வைதமென்னுஞ் சொல்லைச் சொல்லினும், அஃது மில்லாதொழிய விசைக்கினும் அதனுழைத் தூயசிவகதி சம்பந்தங் கிளத்தப்பட்டிருப் பின் அஃதுஞ் சுத்தாத்வைதமெனவே படும். படினும் இவ்வித உப நிஷத்தானது அம்மண்டல ப்ராஹ்மணம், பேதாத்வைத ஸித்திகள்

சுத்தாத்வைதஸித்தி யெனப்படா வெனும்பொருள் பயக்கு மாற்றானே 'சுத்தம்' விசேடணமொழியென்பதை யுணர்த்தி முத்திநிலை கூறி யாங்குத் தெளிவுபோதிக்கும் பேருபகாரத்ததன்றாகலின் அந்தப் பிராஹ்மணம், "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்—ஞாலத் தின் மாணப் பெரிது.'' என்னுமதர்ச் சுத்தாத்வைதிகள் வேண்டுழி வேண்டுழி யெடுத் தாளத்தக்கதொன்றாம். இவ்வுபநிஷத்தினை அச் சிவஞானபோத வுரையாசிரியர் கண்ணுற்றிருப்பராயின் அவர், அவ்வித வுரை யெழுதியிராரென்பதுஞ் சுவாமிகள் தபிப்பிராயமே. மேற்கிளந்த மகாவாக்கிய சிரவணாதி விவரங்களை,

"ஆதலினாற் றத்வமசி வாக்கி யத்தா
லருளியவா றகண்டார்த்த மறிந்து கொண்டு
பேதமறப் பிரஞ்ஞானம் பிரம மென்று
பேசுமகா வாக்கதனுன் மனனஞ் செய்து
வாதகமி லயமான்மா பிரம மென்னும்
வாக்கதனாற் சரியெனவே சம்ம தித்திங்
கோதுமகம் பிரமாஸ்மி வாக்கி யத்தா
லுரைத்தவகண் டார்த்தத்தை யநுப விப்பாய்."

எனச் சிவரகசியத்து ரிபுகீதை உஅ-ஆம் அத்தியாயத்திற் கூறு தல்கொண் டறிக. நிட்டையினுஞ் சீவன்முத்திதசையைக் கடந்து பர முத்தி சம்பந்தானுபவ மெய்துங்காறுஞ் சுத்தாத்வைதங் கூறுதல் கூடாது. விளக்கிய நியாயங்களானே மேற் குறிப்பிட்ட பத்திரிகை யில்—

"தூயதன்மையைக் காட்டுமொரு விசேடமொழியான் விசேடிக் கப்பட்ட சுத்தாத்துவித சித்தாந்தமென்னு முரையும் அவர்தம் வாய் மொழியேயல்லது சுருதிமுறையன்று. என்னை, சுத்தாத்துவிதம் தூய தன்மையைக் காட்டும் ஏனை யத்துவிதம் பாசத்துட்படுதலைக் காட்டுமெனப் பாசத்துட் படாமை பாசத்துட்படுதல்கள் பற்றி அவை யிரண்டு முறையே அத்துவிதம் சுத்தாத்துவிதமென வழங்கப்படு மென் றிங்ஙனங் கிளந்து, அம்மண்டலப் பிராமண மெடுத் தோதா மையின்.''

எனவெழுதி யுள்ளனவும், உண்மையுணராமல் இவற்றினைத் தழீஇய வழியே மகிழ்ந்து மாறி மாறி வரைந்துகொண்ட பிறவும் நன்கு மறுக்கப்பட்டன காண்க. சுத்தாத்வைதமென் னும் பிரயோகம்—

"ச்ருதிஸ்ஸநாதநீ" "வேதோநாதிச்சிவஸ் தஸ்யவ்யஞ்ஜகபரமார்த்த꞉ |"

என்னும் பிரமாணங்களின்படி * அனுதி மறையினுறு மண்டல ப்ராஹ்மணத் துளதேயெனக் கொள்வழி, இடையிற்றோன்றிய தாயுமானவர் பாடற்கட் புனிதமெனும் அத்துவிதமென வருவது கொண்டு சுத்தம் அவர் முதலினேராற் சேர்க்கப்பட்ட தென்னினும், விசிஷ்டம் கேவலம் மறுதலை யென்னும் அடைமொழிகளை நீக்கி அத்வைத சத்தத்தைச் சுத்தமாய்வைப்பதற்கே சுத்தம் கூட்டி யுரைக்கப்பட்ட தென்னினும் இயையுமா றில்லையெனும் பொருளிலே "பொருந்துமாறின்ற; என்னை? அன்னேரும் அம்மதங்களுந் தோன்று முன்னுள்ளதாய் முந்தைச்சுருதியாய் மிளிர்வது அம் மண்டலப்ராஹ்மணமாகலின்." என்பது சிவசூரியப்பிரகாசத்தில் வரையப்பட்டது. அன்னேரும் என்றது இராமாநுஜர் சங்கரர் மத்துவரென்னும் ஆசாரியர்களையே. அம்மதங்களும் என்றது அவர்கண் மதங்களையே. தாயுமானவர் பாடற்கும் உபநிஷத் முற்பட்டதென்பதுணர்த்துவான் முந்தைச்சுருதியாய் என்பது பிரயோகிக்கப்பட்டது. இவ்வியை பறியாது தாயுமானவரும் சிவஞானபோத வுரையாசிரியருமே 'அன்னேர்' எனப்பட்டனர்; அவர் மதங்களே 'அம்மதங்கள்' எனப்பட்டனவென வெண்ணித் தாயுமானவர் பாடலைப்பற்றி யுரைத்த தொக்கு மென்பதாகவும், பின்னுரைத்தது "அதிவியாத்தியாய் ஐயமேயாம்" என்பது மெழுதியுள்ளார் மணற்சோறிசைத்தார். இஃதென்கொலோ? இங்ஙன் அதிவியாத்தி கூறிக்கொண்டு ஐயமேயாம் என முடிவுரைத்ததே அதிவியாத்தி ஆம். சிவசூரியப்பிரகாசத்தே விசிஷ்டம் முதலிய சத்தங்களிலெதனையேனும் முன்னேகொண்டு வரூஉம் அத்வைதத்தைச் சுருதியிலில்லாத புதுவதெனக் கோடன்மான இங்குணர்த்தப்படூஉஞ் சுத்தாத்வைதத்தையுங் கொள்ளொண்ணுதென்னும் பொருளில் "இங்ஙனஞ் சுருதிநெறியான சுத்தாத்வைத சித்தாந்தம் அனுதி" என்பதெழுதப்பட்டது; சுருதி அனுதியெனப்படுமாகலின். பின்னை, "இவ்வத்வைதம் ஆன்மாவின் பெத்ததசையின் சம்பந்தமாம். இச் சம்பந்தம் உடம்பு முயிரும்போல அனுதிக் கலப்பு" என்றருளியதில், உயிரனுதியாயினும் உடம்பனுதியென்பதெப்படி? என்னுஞ் சங்கையொழித்தற்பொருட்டுக் "காரணதேகம் அனுதி" என்னுங் குறிப்பு மெழுதப்பட்டது. இவ்விவரமுணர்ந்துகொள்ளாது "சுத்தாத்துவித சித்தாந்தம் அனுதியென்புழிவரும் அனுதியும் காரணசரீரமோ அன்றே

* மறை அனுதியென்பதன்பொருள் வேதத்தைக்குறித்த வியாசத்து உச - ங்கடாவிடையி னன்குணரலாம்.

வென ஐயமாம்" என்ப தெழுதியுள்ளார் அம்மணற்சோற்று மொழியர். இங்ஙனம் கஉஎ - ம் பக்கம் உக, உ௨ - ம் வரிகளுள் எனவெழுதாமல் "127 - ம் பக்கம் 21 - வது வரிசையுள்" என அவரெழுதினர். பெத்தம் முத்தியென்னு மிருதிறத்தும் கூறப்படூஉம் அத்வைத சத்தங்களைச் சம்பந்தத்தால் ஒன்றெனக் கொள்ளலாமெனின்,—சுத்தாத்வைதமென வருவதன்கணுறுசுத்தம், வெண்ணிலாவென்பதில் 'வெள்' இயற்கையடைமொழி யாதல்போல இயற்கை யடைமொழியாதல் வேண்டும். ஆயின், சுத்தாத்வைதமே இச் சைவநெறியென்று சிறப்பாகக் கூறிக்கோடல் பயனற்றதாகும், சிறப்பான தீர்வையிலே நின்று பயனின்மையாக இயற்கையடைமொழி சேர்க்கப்பட்டதென்பதும் பொருந்தாது, மண்டலப்ராஹ்மணமுந் தாயுமானர் பாடலு மிடங்கொடாவென்னும் பொருண்மையில் "ஆயின் சுத்தாத்துவிதமெனக் கூறிக் கோடலாற் பயனென்று மின்றெனலு மேற்படும்." என்பது முதலியன சிவசூரியப்பிரகாசத் தெழுதப்பட் டிருத்தலை நன்குணராமல்—

"செஞ்ஞாயி றென்ருற்போலப் பாமேசுவரன் மகேசுவரன் என்னுமியற்கை அடைமொழிகள் பயனுடுபடுவ என்னுமாசிரியர் அரதத்தனர் வசனத்தோடு முரணி அபர ஈசுரனு முளனேவென இங்ஙனம் ஐயமேயாம்."

என்னு மொழிகளை மணற்சோறு பகர்ந்தார் தெரித்துள்ளார். சைவபாஷ்யத்தில் "உருத்திரரே! வைத்தியர்களுக்குள்ளே நும்மை மகா வைத்தியர் என்று கேள்விப் படுகின்றேன்" என வரைந்திருப்பதனுள் 'மகா' என்பதியற்கை யடைமொழியன்றென வாதலை யிவரறியார். சுத்தம் இயற்கை யடைமொழியாயின், விசிட்டம் முதலிய விசேடண மொழிகளை நீக்கு நிமித்தமே அத்துவிதத்தோடு சுத்தமென்பது சேர்க்கப்பட்டதென்னும் பொருண்மையில் "யாதானுமொன்ருன் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும்" எனச் சிவஞானபோத வுரையிற் றீட்டியிருப்பது பொருந்தாது. நிலாவின்கணுள்ள வெண்மை இடையிற் சேர்ந்ததன்றே; அத்வைதத்திற் சுத்தம் இடையிற் சேர்ந்ததாமே; உய்த்துணர்ந்து கொள்க. சிவசூரியப் பிரகாசத்தில்—

"அந்த மனோலயம் எதுவோ அது விட்டுணு பரமபதமாம்: அப்பரமபத லயமே சுத்தாத்துவித சித்தி:" என்ப தெழுதப்பட்

டுளது. இதனை, "அந்த மனோலயம் எது அது விண்டு பரமபதம் அவ்விண்டு பரமபதமே சுத்தாத்துவித சித்தி"

என வெடுத்தெழுதிக்கொண்டு அவரது கருத்தை நிறைவேற்றிக்கொண்டார். எத்துணை ஆசை! அவரெடுத்துக்கொண்ட துறைப் பரமபத மென்பதனோடு 'லயம்' என்பதுஞ் சேர்ந்திருப்பின் "விண்டு பரமபதமே மனோலயம் அதுவே சுத்தாத்துவித சித்தி" இது மேலானது என்பதாக இவரெழுதிக்கொள்ள விடனிலதாம். இலாதொழியவே "விண்டு கதியாய பரமபதத்தைக் கீழ்ப்படுத்தி" க் கூறுமாற்றானே அப்பதங் கீழானதென வெழுதினது "முரணியையமேயாம்" என வெழுதிக் காட்டவு மிடமிலாதொழியுமன்றோ. முன்னரும் பின்னரும் விட்டுணுகதி கீழ்ப்பட்டதென்பதும், சிவகதி மேற்பட்ட தென்பதுமே சிவசூரியப் பிரகாசத் துரைக்கப்பட்டன வென்பது மேற்போந்த விவரங்களிலேயே அறியக்கிடக்கின்றது. மணற்சோறு பகர்ந்தாரது இவ் வஞ்சகச்செய்கை, வளவிய அழுக்காற்றிற் றோன்றிய தெனற்கு இஃதுமொரு சான்றாயிருக்கின்ற தென்பாம். அற்றன்றெனினுந் தமது அறியாமையைப் புலப்படுத்திக் கொண்ட தெனல் தப்பாது. இங்கே, முன்னங் கொண்டவாறு தலையங்கமுஞ் சேரின் வரி கரு, கஎ - ஆம். ஆகவே கஉசு - ம் பக்கம் கரு, கஎ - ம் வரிகளுள் எனவும், கஉஎ - ம் பக்கம் க0, கக - ம் வரிகளுள் எனவு மெழுதாமல் "126 - ம் பக்கம் 15 - வது வரிசையுள்" எனவும், "127 - ம் பக்கம் பத்தாவது வரிசையுள்" எனவு மெழுதினர். இன்னுமிவர், சுருதி பலவு முணர்ந்தாரைப்போன்று "சுத்தாத்துவிதமே சிவகதியென்பது சுத்தாத்துவிதம் சிவகதிக்கேது என்னுஞ் சுருதியோடு முரணி யையமேயாம்." என வரைந்தார். "சுத்தாத்துவிதம் சிவகதிக்கேது" என்னுஞ் சுருதியாதுகொல்? எனக் கடாவுவார்க்கு விடையாமாறு அது காட்டினாரல்லர். சுத்தாத்துவிதமே சிவகதி யென்று சுருதி - மண்டல ப்ராஹ்மணம் முடிவு கூறினது மேலே போந்துளது. "சிவத்தோடுகூடிச் சிவமாய் நிற்பதற்கு ஐயமில்லை" எனச் சிவஞானபோதவுரைக்கணெழுதி யிருப்பதும் எமக்கனுகூலமும், அவர்க்குப் பிரதிகூலமு நல்கவேயுளது. இனி, அம்மணற்சோற்றுரையார் இறுதிக்கண் வழுவழென வெழுதியுள்ள பகுதியில் இச்சம்பந்தம் உடம்பும் உயிரும்போல அனுதிக்கலப்பும் உடனுதலும் வேறுதலுமாகிய மூன்றுமென அறியவுள்ளது எனச் சிவசூரியப்பிரகாசத்திற் நீட்டியிருப்பது சிவஞானபோத வுரையி லுளது ;

அஃதச் சிவசூரியப் பிரகாசமாகிய உரைக்குறை நிரப்பவே யெடுத் தெழுதிக் கொள்ளப்பட்டதென்னுஞ் செய்திகள் சேரச் சிலவசனங் கள் பொறித்தமை கருதும் யாங் கூறுவதியாதெனின்,—"தாயுமா னுர்பாடலில் 'அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே' என வருவதன்கணுள்ள அரும்பு மலர் காய் கனியென்பனவும், திருக்குற ளில் 'யானென தென்னுஞ் செருக்கு' எனவரு தொடரும் முறையே உரைக்குறை நிரப்ப அச் சிவஞானபோதவுரை யுழி (அ-ஞ் சூ. க-ம் அதி.) 'அரும்பு மலர் காய் கனி யாதல்போல' என வருவதன்கண்ணும், மெய்கண்ட நாதரது வார்த்திகமென்னும் பொழிப் புரையுழி (கo-ஞ் சூ க-ம் அதி.) 'யான் எனதென்னுஞ் செருக் கற்று' என வருவதன்கண்ணும் எடுத்தெழுதிக் கொளப்பட்டன கொலோ?" என்னுங் கடாவே. மணற்சோற்றினர் உலகியலுணர்ந் தவராயில்லை. "வேதாந்தத் தீதில் பொருள்கொண் டுரைக்குநூல் சைவம். வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம். வீடு வைதிக சைவம் பகரும் என்னுஞ் சித்தாந்த சாத்திரக் கிளவிகளின்படி இவை வைதிகசைவ சித்தாந்தசாத்திரங்களென அவையற்றைப் படித் தோர் கூறிக்கொள்வதேயன்றி, அந்த வைதிக நூன்மொழிகளையே னும் உரிய ஆகம மொழிகளையேனுஞ் செவ்வனே இன்றுகாறு மெடுத்துக்காட்டிப் பொருள்செய்திருக்கு நூலொன்றேனுங் கண் ணுற்றதின்றென்பது தெள்ளிது." என ஸ்ரீமத்-சுவாமிகளுடைய சிடர்களு ளொருவர் கூறிய முகவுரை மொழிகளைக் கண்ணுற்றுப் பொறுமை கொண்டே பலவு மெழுதினரென்பது—"முகவுரை 7-ம் பக்கம் 1-வது வரிசையுள்" என வரைந்து அவ ரெழுதியிருப்பது கொண்டே யறியப்படுகின்றது. இவரேனும், இவரான் நன்கு மதிக் கப்பட்ட எவரேனும் அம்முகவுரையுண் மொழிந்தபடி வைதிகநூன் மொழிகளை, நிறைவுறுங்காறு மெடுத்துக்காட்டி ஐயந்திரிபற வுரை செய்து வெளியிட்டிருப்பின் அச்சிட ரவ்விதம் அறைதற்கிட னிராதே; வைதிகசைவராயுள்ளார் பலரும் புகழ்வரே. ஓராறிருப் பின், இனியேனும் அவையெடுத்துக் காட்டப்படலாமே. இலை யெனிற் செய்தேனுங் காட்டலாமே. வாளா கவறலின் யாது பயன்! மலம் அனுதி யென்பதுபற்றி "நெல்லிற் குமியு நிகழ்செம் பினிற்க ளிம்புஞ்—சொல்லிற் புதிதன்று தொன்மையே" என்றாங்குவமைகள் மெய்கண்டதேவர் முதலியோர் கூற்றுக்களி லுளவேயன்றிச் சுருதி முதலிய பிரமாணங்களி லிலவென்று ஏகான்மபக்ஷத்தார் வாதித்

தலைத்த ஞான்று வாளாவிருந்துவிட்ட சைவரும் இறும்பூதுறுமாறு அவ்வுவமைகளுடைச் சுருதிகளை யெடுத்து உதாஹரித்தவர் பரிபூரணானந்த போதாசாரியரே யன்றி வேறொருவருமல்லரே. இன்னணம் வைதிக சைவசித்தாந்த நிரூபணார்த்தம் எத்துணையோ சுருதியாதி பிரபலப் பிரமாணங்களையும் அவர் காட்டிச் சுவானுபவவுண்மை திகழ நன்முடி வருளியுள்ளார். இன்னும், சைவ விரோதிகளது செருக்க டங்குமாறு வேதப்பிரமாணாதிகள் செறிக்கப்பட்ட சைவசமய சரபம் முதலிய பெருநூல்களையும் அருளிச்செய்து நியாயத்தலம் பல புகுந்து பல்லாண்டுகளாகப் படாப்பாடுபட்டுத் தமது பக்கத்திற்கே அநுகூல மான முடிவுகளும் பெற்றுள்ளார். உபகாரங்கருதிப் பத்திய கத்திய ரூபமான வேறு பலநூல்களு மியற்றியருளினர். இத்திறப் பெருநன்றிகளை நடுவுநிலையினின்றுணர்வார் யாவரும் மதித்துள்ளார். மணற் சோற்றுக்காரரும் அவரையருமே மதியாமையால் விளைந்ததியா தெனின்,—தொடக்கறு துறவியாய் இத்துணைச் சிறப்பு வாய்ந்தவரா யுள்ள பெரியாரையே யிகழுஞ்சைவர் இனி, யாரையிகழார்! யாது செய்யார்! இவரால் எம்மனோர்க் கியாதுபயன்! இவர் விழைமதக் கோட்பாடுதான் எவ்வுண்மையிலுளது! அஃதெத்திறத்தாரா னேன்று கோடற்பாற்று! ஒற்றுமை நயமுமின்றே! எனத் தெரித்துப் பலரு மொதுங்கி யொதுக்கிப் பரிபூரணானந்தபோதம் விழைந்துய்ய நேர்ந் ததே தலைப்பட்டதாம. நியாயத்திற்குந் தமதனுபூதிக்கும் மாறுகோ ளாகச் சிற்றளவிற் பேரளவிற் காணப்படூஉம் எப்புத்தக மாற்றங்களை யும் ஸ்ரீமத் - சுவாமிகள் ஒருஞான்று மேன்றுகொளார்க ளாகலிற் கதானுகத நியாயமாகச் செல்வார் செல்க.

("எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.")

இங்ஙன நிகழ்த்தப்பட்ட யாவும் ஸ்ரீமத் - சுவாமிகளது மகா சன்னிதானத்தில் யாங் கேட்டுணர்ந்துகொண்ட வன்மை வழியே எம்மா லெழுதப்பட்டனவாம். மேலே குறிப்பிட்ட நட்டபாக்க மென்னும் ஊரும் அம்பலவாண நாவலனென்னும் பெயருங் கேள்விப்படாப் புதுமையாயிருப்பன கருதுபு சித்தாந்த பத்தி ராதிபரவர்களை வினயவழிச் சிதம்பரத்திற் கணித்தாய ஆடூரிலுள ரெனல் புலப்படுகின்றதெனுஞ் செய்தி கிடைத்த பின்றை அப் பெயர் குறிப்பிட் டெழுதலாய எமது ரிஜிஸ்டர் நோட்டீசிற்கு விடையிலாது "அம்பலவாணப்பிள்ளை" என்னுங் கையெழுத்

திடப்பட்ட தபால் ரசீது (Acknowledgement) மட்டுங் கிடைத்துளது. விசாரிப்பில் அந்நோட்டீசைப் பெற்றுளோன் ஒரு சிறுவன்; அவன் நாவலனெனற் குரியானல்லன்; செப்பறைச் சுவாமியென்பார் தம்மாலெழுதப்பட்ட அதனை அவனெழுதியதாக அவனையொப்புக்கொள்ளச் செய்துள்ளார் என்பன வெளியாயின. கையெழுத்து அம்பலவாண நாவலனென் றிடப்படாமே 'அம்பலவாணப் பிள்ளை' என விடப்பட்டதும் இவற்றை வலியுறுத்துகின்றது. அப்பத்திராதிபரவர்களால்—

"உ முருகன்றுணை. ஸ்ரீமத் - சுவாமிகள் சந்நிதானத்தில் விஞ்ஞாபனம். சுவாமிகள் சென்னைக் கெழுந்தருளி, 'திருப்பா' அச்சிட்ட காலமுதல், நான் சுவாமிகளிடத்தில் அன்பு பாராட்டி வருபவன். சந்நியாசம் பூண்டு வைதிக சைவ சித்தாந்த நெறியினின்று உலகோபகாரமாக உழைத்து வருபவராகிய சுவாமிகளிடத்தில் தானு நான் அசூயை கொள்வேன். நான் ஜலகண்டபுரத்திற்குப் பிரயாணப்படும் சமயத்தில் தென்தேயத்திலிருந்து வந்த இரண்டொரு விஷயங்களின் கடிதத்தின் தலைப்பெயர்களை மாத்திரம் பார்த்துக்கொண்டு அச்சாபீசில் கொடுத்துவிட்டுப் போய்விட்டேன். பின்னர் நான்வந்து அச்சிட்டு முடிந்த சஞ்சிகையில் சுவாமிகள் விஷயமாக எழுதியிருந்ததனைப் படித்துப்பார்த்து இதைப்பற்றிப் பதிலாவது வேறுவகையிலாவது எழுதப் பிரயத்தனம் செய்யின்விஷயம் விரியுமென்றும் கவலையிடாதிருந்தேன். செப்பறைசுவாமிகளைத் தென்தேயத்தில் இரண்டொருதரம் சந்தித்தேனேயன்றி அவர் நெருங்கிய சிநேகமே கிடையாது. அம்பலவாணர் என்பவரை இதுவரையில் பார்த்ததேயில்லை. இதுண்மை.

(Sd.) மணவழகு."

என்னுஞ் செய்திகளுங் கையொப்பமும் வரையப்பட்ட கடிதத்தாலும் அப்பெயருடையார் வெளிப்பட்டுளார், உண்மை யெவ்வாறாயினுமாக.

இக்கடிதத்திற் கூறப்படுங் காரணந் தகுதித்தன்றெனச் சிலர் பகர்தலையறிந்த பத்திராதிபரவர்கள், சுவாமீ! அச்சிலர் கூற்றுக்களையேன்றுகொளவேண்டா; யாது விளைந்திருப்பினும் பொறுத்துக் கோடல் நின்போல்வார்க்குக் கடமையே யென்னுங்கருத்தானே கூ-செய்யுள்களோடு பின்னர் வரையப்பட்ட கடிதம்—

"உ வேலுமயிலுந்துணை. ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் மகா சந்நிதானத்தில் விஞ்ஞாபனம்.

குமரகுரு தாசயோ கீந்திர சிகாமணியே கூற்ற மஞ்சுஞ்
சமரபுரி முருகனிரு சரணமலர் பணியடியர் தமியே னுள்ள

மமரவவர் தெய்வமென நினைந்தொழுகு மடியேன்மாட் டளுவை கொண்டு
தமரமுற விழைத்தசிலர் சொலமனத்தின் மறந்திடற்குத் தயைசெய் வாயே.
என்னினைவி லடியர்மனம் புழுங்கிடவே செய்திடற்கிங் கெண்ணுக் கொள்கை
தன்னிலிருந் திடினுநா னேர்சிறிது கவனியாத் தன்மை யாலே
யின்னவிப ரீதம்விளைத் தற்கேதாய் நானுமோ ரிலக்காய் நின்றேன்
முன்னைவினைப் பயனெனவே நினைந்துள்ளேன் முனிவவினி முனிந்திடாயால்.
தவறேசெய் திருந்தாலுந் தன்னேரில் லாவுள்ளத் தன்மை வாய்ந்த
தவமிகுயோ கியாதனை நோக்காது சமித்திடுதல் தகுதி யன்றோ
யவமேயொவ் வோர்சமயம் விளைந்திடுதல் சீவனுக்கிங் கமைந்து நேர்த
னவமோவிவ் வுண்மையினைச் சாமீநீ யறியாத நடக்கை யன்றே.

(Sd.) மணவழகு."

என்னுமிதுவே. இக்கடிதம் 20—3—1917ற் சுவாமிகட்குக் கிடைத்துளது.

"மணவழகு" என்னுங் கையொப்பத்திற் குரியார் ஸ்ரீமத்-சிவஸ்ரீ, கலியாணசுந்தர யதீந்திர ரவர்களே. மேற்குறிப்பிட்ட பத்திராதிபரும் இவர்களே. இன்னுமிவர்கள், 1917-ம் வருடத்து மார்ச்சுமாதத்தில் வெளிபிடப்பட்டதாயுள்ள பத்திரிகைப் பகுதியிற் "பரிபூரணானந்த போதமும் சிவசூரியப்பிரகாசமெனு முரையும்" என வெடுத்துக்கொண்டு கூறுமிடத்தே—

"இந்நூல் பாம்பன் - ஸ்ரீமத் குமரகுருதாசசுவாமிகள் அருளிச்செய்தது. சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவ சமயத்துண்மை தென்மொழிப் பிரமாணங்களாலும் வடமொழிப் பிரமாணங்களாலும் இதனுள் நன்கு விளக்கி வச்சிரலேபமாக நாட்டப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர் மண்டலபிராம்மணோபநிஷத்துப் பிரகாரம் சுத்தாத்துவிதம் கூறியிருக்கின்றனர். உபநிடதங்களாகிய வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் சிறிதும் பேதமின்மையைத் தெரிவிக்கின்றது. நூற்றெட்டு உபநிடதங்களும் சித்தாந்தமேயென விவகரித்திருக்கிறது. உபநிடதங்களில் ஏகான்மவாதிகள் தங்கட்கு ஆதரவாகக் காட்டிவரும் சுலோகங்களில் சித்தாந்தவுண்மையினைச் சுருதி யுக்தி யனுபவங்கட்கிசையப் பொருத்திக் காட்டியிருக்கிறது. அன்றியும் துறவுக்கு அத்தியாவசியமாக வேண்டும் பற்பல சாதனங்களைப் பற்பல வகையாக எடுத்துக்காட்டி வலியுறுத்தியிருக்கிறது."

என்பன கிளந்து அந்நூன் மாண்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அம்மணற்சோறு பகர்ந்தார் மேலுணர்த்தலாய நியாயங்களை யுணர்ந்துய்தி பெறுமாறே பற்றுவரென்னுந் துணிபே இனி யாங்கோடும். அடங்காது மறைந்து நின்று யாதும் பொறிப்பாராயின் எம்மனோர்,

அதனைத் துவை துவையென்று துவைத்தொழிப்பதுமன்றி அச்சோறு பகர்ந்தாரானும் அவர தபிமானத்திற் குரியோரானும் பொறிக்கப்பட்ட புத்தகங்கண்மாட்டுள்ள வழுக்களை யெல்லா மொருங்கே திரட்டியும் வெளியிடுவர். யாமுங் கவனிப்போம். மற்றெது செய்யத்தக்கதோ அதுவுஞ் செயப்படும்.

போந்த அத்வைத சுத்தாத்வைத விவரம், பரிபூரணானந்த போத சிவசூரியப்பிரகாசத்தே எட்டுச் சிறைகட் கதிகமாயிருத்தலின் நனி பெரிதே, நனிபெரிதே. சத்தார்த்தத்தோடும் உதாரணங்களோடுஞ் செவ்வனுணர வவாவுநர் அவ்வுரை நோக்குவாராக. அப்படியாரும் விளக்கியது கண்டிலம். வேதப்பிரமாணமே யதிகம்.

இங்ஙனம் :

திருவல்லிக்கேணி
1917-ம் ௵
ஏப்ரல்௴

ஸ்ரீமத் - சுவாமிகளுடைய சீடர்களுளொருவரும்,
குமாரச்சிவமெனும் பெயருடையருமாகிய
தா. வேங்கடாசல முதலியார்.

சுத்தாத்வைத நிர்ணயம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫	௫	சுவாமிகளின்	சுவாமிகள்

க௫ - ம் பக்கத்து உஅ - ம் வரியில்—'யம்' என்பதற்கும், 'மனனம்' என்பதற்கும் இடையிலே—

“சிரவணம் (=கேட்டல்) ஆகவும், (ப்ரஜ்ஞாநம்ப்ரஹ்ம=) 'பெரிய ஞானமே சொரூபமாகவுளது பிரமம்' என்னு மகாவாக்கியம்”

என்னு மொழிகளைச் சேர்த்து வாசிக்க.

KOV... LIBRARY, KOVILOOR
A. No. 39227

அறிவிப்பு.

1.	இந்நூலாகிய சுத்தாத்வைத நிர்ணயம் விலை	0	3	0
2.	பரிபூரணானந்த போதமும், சிவசூரியப் பிரகாச மெனு முரையும் விலை	2	0	0
3.	தகராலயரகசிய மூலமும், சதானந்த சாகரமெனு முரையும் விலை	2	8	0
	இந்த 2. 3. இலக்கங்களிலுள்ள இரண்டுமொன்றாகக் கட்டப்பட்டது விலை	3	12	0
4.	சைவசமயசரபம், வசனம் விலை	1	12	0
5.	சிவயாதனுவியாசம் மூலமுமுரையும், யாவரும் படித்துணரத்தக்கவோரரிய நூல் விலை	0	11	0

இன்னும் பலவுள. பெரிய பிரகடனங்களி லறிக.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞான பானுவாய் விளங்கும் பாம்பன்: ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளால் உலோகபகாரமாய் அருளிச்செய்யப்பட்ட இவை:—சென்னையைச் சார்ந்த திருவல்லிக்கேணி வீரராகவமுதலித் தெரு 135 - வது வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, V. இராஜாபாதர் முதலியாரிடத்திற் கிடைக்கும்.

அறிவிப்பு.

வேதத்தைக்குறித்தவியாசம்—வேதம் முதலிய நூல்களினுட்பமுணரலாம்; வசனம்	0	8	0
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம்—வசனம் ...	0	7	0
சிறுநூற்றிரட்டு—சண்முக கவசம் முதலிய 10 நூல்களுள; 2-ஆம் பதிப்பு	0	3	0
குமரவேள்பதிற்றுப்பத்தந்தாதி—படிக்குந்தோறுங் கண்ணீர் வாரவாரப் பக்திரசம் இனிது பெருகும்; 2-ஆம் பதிப்பு	0	1	0
சண்முக சகச்சிரநாமார்ச்சனை—புராணத்தின் பல பிரதிகள்கொண்டு உற்றவழுவெல்லா மொழித்து இனிது அச்சிடப்பட்டது; தமிழெழுத்தாகலின் தமிழெழுத்துக்கற்றோரும் அருச்சிக்க வுதவும்; இதனோடு குமாரஸ்தவமுஞ் சேர்ந்துளது; வரலாறு முதலியனவு முள	0	4	0
சஙவதிகாரமும் பெருமிறைக்கவியுரையும்—பெரிதும் பயன்படுவனவாயுள. பெருமிறைக்கவியுரை விசித்திரமான 14-அலங்காரமாயுளது; இதன் பெருமை யிங்கு விளங்கக் கூறற்பாலதன்று	0	2	0
சேந்தன்செந்தமிழ்—வடமொழி புகாது பாடப்பட்டது; தமிழொரு தனிப்பாடையெனற் பாலதை இதுகொண்டுதான் வற்புறுத்தல் வேண்டும்	0	2	0
பத்துப்பிரபந்தம்—சிறந்தநூல்; ஒவ்வொரு பிரபந்தத்தின் அருமைப்பாடும் இங்ஙனெடுத்துரைத்தற் கேலாது. கண்டுகளிகூர்க	0	7	0

இன்னும் பலவுள. பெரிய பிரகடனங்களி னறிக.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிகசைவசித்தாந்தஞானபானு பாம்பன்: ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகளா லருளிச்செய்யப்பட்ட இவை:—சென்னையைச் சார்ந்த திருவல்லிக்கேணி வீரராகவ முதலித்தெரு 135-வது வீட்டில் ம-அ-அ-ஸ்ரீ V. இராஜாபாதர் முதலியாரிடத்திற் கிடைக்கும்.